




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விஸ்வ யுவகேந்திரா, ஓயிஸா இண்டர்நேஷனல் மற்றும் மாவட்ட வருவாய்த்துறை இணைந்து, மூன்று நாட்கள் நடைபெறும் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சியினை நாகர்கோவில், பி.டி.பிள்ளை திருமண மண்டபத்தில் இன்று (01.03.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 149/2017 நாள்: 01.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், விஸ்வ யுவகேந்திரா, ஒயிஸா மற்றும் மாவட்ட வருவாய்த்துறை மூலம், மூன்று நாட்கள் நடைபெறும் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சியினை இன்று (01.03.3027) தொடங்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், விஸ்வ யுவகேந்திரா, ஒயிஸா இண்டர்நேஷனல் மற்றும் மாவட்ட வருவாய்த்துறை இணைந்து, மூன்று நாட்கள் நடைபெறும் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சியினை நாகர்கோவில், பி.டி.பிள்ளை திருமண மண்டபத்தில் இன்று (01.03.2017) தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் விஸ்வ யுவகேந்திரா, ஒயிஸா இண்டர்நேஷனல் மற்றும் மாவட்ட வருவாய்த்துறை இணைந்து, மூன்று நாட்கள் நடைபெறும் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி இன்று முதல் மார்ச் 3-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இதில், பேரிடர் மேலாண்மை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. குறிப்பாக, நில நடுக்கம், சுனாமி, நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படும்போது, அதிலிருந்து பொதுமக்களை எவ்வாறு மீட்பது குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. பேரிடர் மேலாண்மை குறித்து, மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் போன்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மழை பெய்யும் காலங்களில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் 1, சிற்றார் - 2 போன்ற அணைகளின் நீர்வரத்து மற்றும் வெளியேற்றும் நீரின் அளவு கண்காணிக்கப்பட்டு வருகிறது. அணைகளிலிருந்து தண்ணீர் அதிகமாக வெளியேற்றும்போது, குறிப்பாக குழித்துறை தாமிரபரணி ஆற்றின் அருகில் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தகவல்களை சரியான முறையில் தெரிவிக்கப்படுவதுடன், அவர்களின் பாதுகாப்பு நலன் கருத்தில் கொண்டு, அரசு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவார்கள். மழையின் அளவு 150 மி.மீ -க்கு மேலாக தொடர்ந்து இரண்டு நாட்கள் பெய்து வரும்போது, நான்கு அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர வாய்ப்புள்ளது. ஆகையால், தண்ணீர் திறக்கும்போது வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த காலத்தில் பொதுமக்களை பாதுகாப்பான இடத்தில் தங்க வைப்பதற்கு, நமது மாவட்டத்தில் 61 பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது (பள்ளிகள்).

இந்த முகாமில் தங்கும் பொதுமக்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு, அவர்களது உடல்நலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலத்தில், சாலைகள், போக்குவரத்து வசதி, மின்சார வசதி, தொலைதொடர்பு வசதிகள் ஆகியன பழுதுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இவைகள் அனைத்தும் உடனடியாக சரிசெய்வதற்காக, மாவட்ட நிர்வாகத்தின் மூலம், பல்வேறு நிலையிலான அலுவலர்களை தயார்நிலையில் எப்பொழுதுமே வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் போது, மனிதனின் உயிருக்கு எந்தவொரு ஆபத்தும் ஏற்பாட கூடாது என்பதற்காகவும், வீட்டில் உபயோகிக்கும் பொருட்களை வைத்து எவ்வாறு ஆபத்திலிருந்து மீள்வது குறித்து, பொதுமக்களுக்கு அப்பகுதியிலுள்ள முதல் உதவி கண்காணிப்பாளர்களுக்கு ஏற்கெனவே பயிற்சிகள் பல்வேறு கட்டங்களில் வழங்கப்பட்டுள்ளது.

திருவட்டார், குழித்துறை மற்றும் முஞ்சிறை ஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏதேனும் ஏற்படும்போது, சுமார் 8 கி.மீட்டர் தூரம் உள்ள பொதுமக்களும் தெரிந்து கொள்ளும்வகையில், சைரன் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் நமது மாவட்டத்தில் மிக சிறப்பாக செய்திருக்கிறோம். மேலும், இன்று பயிற்சியில் கலந்து கொண்ட நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட முதல் உதவி கண்காணிப்பாளர்கள் (First Responder), அனைவரும், பயிற்சியில் வழங்கும் அறிவுரைகளை பின்பற்றுவதோடு, நண்பர்கள், பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோர்களிடம் எடுத்துக்கூறி, விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இன்று நடைபெற்ற பயிற்சியில் நாகர்கோவில் ஹிந்து கல்லூரி, ஐயப்பா கல்லூரி, முஸ்லீம் கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளிலிருந்து சுமார் 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பேரிடர் மேலாண்மை குறித்து, விழிப்புணர்வு கையேடினை வெளியிட்டார்.

நிகழ்ச்சியில், ஒயிஸா இண்டர்நேஷனல் நிறுவனத்தின் இயக்குநர் திரு. எம். அரவிந்த் பாபு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் (விஸ்வ யுவகேந்திரா) திரு. ராஜட் தாமஸ், ஒயிஸா தலைவர் திரு. செல்வராஜ், திரு. நளினாக்ஸான், திரு. அஜேந்திரநாத், திரு. சுரேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.